


## Safeguarding Kids Together (SKT)

### Fact sheet for parents and carers

# குழந்தைகளை ஒன்றிணைந்து பாதுகாத்தல்

## பெற்றோர்கள் மற்றும் பராமரிப்பாளர்களு-க்கான தகவல் ஏடு

### ‘குழந்தைகளை ஒன்றிணைந்து பாதுகாத்தல் குறித்து’ (About Safeguarding Kids Together (SKT))

ஒவ்வொரு மாணவ-மாணவியும் அவர்களால் இயன்றவற்றைச் சாதிப்பதற்கு உதவும் பலவகைப்பட்ட மூலவளங்களைப் பாடசாலைகள் கொண்டுள்ளன. NSW மாநிலத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் கிடைக்கும் SKT (குழந்தைகளை ஒத்துழைப்பாய்ப் பாதுகாத்தல்) எனும் மூலவளமானது உடனடியாகக் கிடைக்கும் சிறப்புத்துவ அறிவுரையையும், அபாயகரமான விதங்களில் நடந்துகொள்ளும் மாணவ-மாணவியர்களுக்கு உதவும் விதத்திலான திட்டங்களையும் அனைத்து பாடசாலைகளுக்கும் அளிக்கின்றன. பின் வருவனவற்றில் SKT உதவும்:

- அனைவரையும் உள்ளடக்கும், நெகிழ்வுத் தன்மையுள்ள பாடசாலைச் சூழல்களை உருவாக்கல்.
- பாதிப்புறும் நிலையில் இருக்கக்கூடிய மாணவ-மாணவியரை அடையாளம் கண்டு, தகுந்த ஆதரவுதவிகளை அவர்களுக்கு அளித்தல்.
- அவசரகால நிகழ்வுகளை நிர்வகித்து அவற்றிற்கான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

### இளம் வயதினருக்கு ஆதரவுதயளிப்பதற்காக ஒன்றிணைந்து பணியாற்றல்

அபாயகரமான நடத்தைகளில் ஈடுபாடுகொள்ளும் நிலைக்கு மாணவ-மாணவி ஒருவரை இட்டுச்செல்லக் கூடிய காரணக் கூறுகள் பலவுள்ளன - ஒருவரைத் தொல்லைகளுக்கு ஆட்படுத்துதல், இணையம் மூலமான தொல்லைகளும் இதில் உள்ளடங்கும், உடல்ரீதியான வன்முறை, அல்லது உடல்ரீதியான வன்முறை குறித்த அச்சுறுத்தல்கள், சுய-தீங்கிழைப்பு, போதை-வஸ்துத் துஷ்ப் பிரயோகம் மற்றும் குற்றங்கள் புரியும் அல்லது மற்ற தீய அமைப்புகளுடன் ஈடுபாடுகொள்ளல் ஆகியன இதற்கான உதாரணங்களாகும்.

- உங்களுடைய பிள்ளையின் நடத்தையில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கவனித்து அவர்கள் உதவி நாட அவர்களுக்கு உதவும் நிலையில் பாடசாலைகளோடு சேர்ந்து செயலாற்றும் நிலையில் நீங்கள் இருப்பீர்கள். உங்களுடைய பிள்ளையின் நடத்தையில் நீங்கள் மாற்றங்களை அவதானித்தால், அல்லது உங்களுடைய பிள்ளையைப் பற்றி நீங்கள் கவலைப்படும் அளவிற்கான தகவல்களை உங்களுடைய பிள்ளை உங்களுடன் பகிர்ந்துகொண்டால், பின் வரும் யோசனைகள் உங்களுக்கு உதவியாக இருக்கலாம்.

உங்கள் பிள்ளை சொல்வதை அமைதியாக செவிமடுத்துக் கேட்டு, முழு விபரங்களையும் தெரிந்துகொள்ளுங்கள். மனம் திறந்து பேச உங்களுடைய பிள்ளையை ஊக்குவியுங்கள், அத்துடன் உதவி மற்றும் அறிவுரை நாடுவதில் தவறு ஒன்றும் இல்லை என்று அவர்களுக்குச் சொல்லுங்கள்.

தேவைப்பட்டால், இன்னும் அதிக விபரங்களைப் பெறுவதற்காகக் கேள்விகள் கேளுங்கள்: யார், என்ன, எங்கே, எப்போது என்று வினாவுங்கள். உங்களுடைய பிள்ளை என்ன செய்ய விரும்புகிறார் என்றும், நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று அவர் விரும்புகிறார் என்றும் அவரைக் கேளுங்கள். பாடசாலைப் ஊழியர்களுடன் நீங்கள் பேசுவது குறித்து உங்களுடைய பிள்ளை தயக்கப்படக்கூடும்.

பாடசாலையிலிருந்து உதவியையும் அறிவுரையையும் நாடும் யோசனையைப் பற்றிக் கலந்துரையாடுங்கள், மற்றும் இது பயனளிக்கக்கூடும் என்று அவர்களுக்கு நம்பிக்கையூட்டுங்கள்.

தகுந்த தகவல்களைப் பாடசாலையுடன் பகிர்ந்துகொள்ளுங்கள். உங்களுடைய பிள்ளையின் ஆசிரியரைச் சந்திப்பதற்கான வேளை ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளுங்கள், மற்றும், உங்களுக்குத் தேவையென்றால், பாடசாலை அதிபருடன் பேச வேண்டுமெனக் கேளுங்கள்.

பாடசாலை சந்திப்புகளைப் பற்றியும், பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நீங்கள் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுவீர்கள் என்பதைப் பற்றியுமான பதிவுகளை வைத்திருங்கள்,

பாடசாலையுடன் ஒன்றிணைந்து செயல்படுவது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கான மிகச் சிறந்த வழி. உங்களுடைய பிள்ளையின் பாதுகாப்பைப் பற்றிய பாரதூரமான கவலை உங்களுக்கிருந்தால், காவல்துறையினருடன் தொடர்புகொள்ளுங்கள்.



குடும்பத்தினர், சம-வயதினர் மற்றும் பாடசாலையுடன் தொடர்பில் இருத்தல், தாம் அவர்களில் ஒரு அங்கம் எனும் உணர்வு என்பன இளம் வயதினருக்குப் பாதுகாப்பு உணர்வினை ஏற்படுத்தும் பெரும் சக்தி வாய்ந்த கூறுகளாகும்.

## உங்களுடைய பிள்ளைக்கு நீங்கள் உதவ இயலுமான சில வழிகள் யாவை?

உங்களுடைய பிள்ளையினது அன்றாட அலுவல்கள், அவர்களுடைய சம-வயதினர் மற்றும் அவர்களுடைய பாடசாலை வாழ்க்கை ஆகியவறைப் பற்றிய தகவல்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வதற்கான வாய்ப்புகளை உங்களுடைய பிள்ளைக்குக் கொடுக்கும் விதமாக அவர்களுடன் ஈடுபாடு கொள்ளுங்கள். உங்களுடைய பிள்ளை எங்கே இருக்கிறார், யாரோடு இருக்கிறார் மற்றும் என்ன செய்துகொண்டிருக்கிறார் என்பதை நீங்கள் தெரிந்துகொள்ள இது உங்களுக்கு உதவியாக இருக்கும்.

உங்களுடைய பிள்ளையின் ஆர்வங்களை வெளிப்படுத்துவதற்காக ஏதாவதொரு வழியையும், தாமும் இதில் ஒரு அங்கம் எனும் உணர்வையும் அவர்களுக்கு அளிக்கும் விதத்திலான நடவடிக்கைகளில் அவர் ஈடுபாடு கொள்ள உங்கள் பிள்ளையை ஊக்குவியுங்கள். உதாரணமாக, விளையாட்டுகள், கலை நிகழ்ச்சிகள், பொழுதுபோக்குகள் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட கழகங்கள் ஆகியவற்றைச் சொல்லலாம்.

இணையப் பயன்பாட்டினைப் பற்றித் தெரிந்துகொள்ளுங்கள், மற்றும் கணினிகள், டேப்ளட்டுகள் மற்றும் ஸ்மார்ட்-ஃபோன்கள் போன்ற எலெக்ட்ரானிக் சாதனங்களை உங்களுடைய பிள்ளை பயன்படுத்தும் விதத்திலுள்ள பலன்களையும் ஆபத்துகளையும் விளங்கிக்கொள்ளுங்கள், மற்றும் இந்த சாதனங்களை அறிவார்ந்த விதத்தில் உங்கள் பிள்ளை பாவிக்க அவருக்கு உதவியாக இருங்கள்.

இணையம் மூலமாகப் பாதுகாப்பான மற்றும் இன்புறத்தக்க அனுபவங்களை உங்கள் பிள்ளை பெற அவருக்கு நீங்கள் எவ்வாறு உதவலாம் என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு esafety.gov.au/ எனும் eSafety வலைத்தலத்திற்குச் செல்லுங்கள்.

நேர்முகமான தொடர்புறவுகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமும், தகவல்களை எவ்வாறு திறனாய்வு செய்வது என்று காண்பிப்பதன் மூலமும் ஒரு முன்னுதாரணமாக இருங்கள்.

உங்களுடைய பிள்ளையின் நடத்தையில் ஏற்படும் மாற்றங்களை அவதானியுங்கள், மற்றும் அவர்களுடைய எண்ணங்களையும், உணர்வுகளையும் உங்களுடன் பகிர்ந்துகொள்வது பாதுகாப்பானது எனும் உணர்வு அவர்களுக்கு ஏற்பட உதவுங்கள்.

மற்றவர்களுடைய கருத்துகளைத் தெரிந்துகொள்ளவும், அவற்றை விளங்கிக்கொள்ளவும் உங்களுடைய பிள்ளைக்கு உதவும் வகையில் மனம் திறந்த, உண்மையான கலந்துரையாடல்களை ஊக்குவியுங்கள்.

உங்களுடைய பிள்ளையின் கரிசனங்களைச் செவிமடுத்துக் கேளுங்கள், மற்றும் அவர்களுடைய நோக்கு என்ன என்பதை விளங்கிக்கொள்ள முயற்சியுங்கள். உங்கள் பிள்ளை சொல்வதில் உங்களுக்கு உடன்பாடு இல்லை என்றாலும், அவர்கள் சொல்வது ஏற்றுக்கொள்ளப்படுகிறது, அத்துடன் அவர்களுக்கு உதவ நீங்கள் இருக்கிறீர்கள் என்ற எண்ணத்தினை அவர்களுக்கு ஏற்படுத்துவது முக்கியம்.

### சில உபயோககரமான வலைத்தலங்களைப் பாருங்கள்

- இயலுமான அளவிற்குச் சிறந்த மன-நலனைப் பெறுவதற்கான தகவல்கள், ஆதரவுதவி மற்றும் ஒத்தாசை ஆகியவற்றை ஒவ்வொருவருக்கும் beyondblue.org.au எனும் வலைத்தலம் மூலமாக Beyond Blue அளிக்கிறது.
- மாணவ-மாணவியர் தொல்லைகளுக்கு ஆளாக்கப்படுவதைத் தடுக்கவும், இதற்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமான தகவல்களைப் பணியாளர்களுக்கும், மாணவ-மாணவியருக்கும், பெற்றோர்களுக்கும் NSW அரசின் antibullying.nsw.gov.au எனும் வலைத்தலம் அளிக்கிறது.
- இணையப் பாதுகாப்பு குறித்த மூலவளங்களையும், இணையத் துஷ்ப்பிரயோகம் சம்பந்தப்பட்ட வழிகாட்டல்களையும் esafety.gov.au எனும் 'eSafety ஆணைய'ரது வலைத்தலத்தில் காணலாம்.



### மேலதிகத் தகவல்களுக்கு

உங்களுக்கு மேலதிகத் தகவல்கள் தேவைப்பட்டால், தயவுசெய்து உங்களுடைய உள்ளூர்ப் பாடசாலையுடன் தொடர்புகொள்ளுங்கள். உங்களுடைய விசாரிப்பில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரது உதவி உங்களுக்குத் தேவைப்பட்டால், 'தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை'யை 131 450-இல் அழைத்து உங்களுடைய மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவையெனக் கேளுங்கள்.

நீங்கள் அழைக்க விரும்பும் இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குனருக்குக் கொடுங்கள். உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை இயக்குனர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.